முருகப்பெருமான் துணை

**மகான் வசிஸ்டமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**03.11.2021**, புதன்கிழமை

1. தவசித்தே ஆறுமுக அரங்கா
தனிப் பெருங்கருணை வடிவாக
அவதாரம் எடுத்த தேசிகா
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ துலை திங்கள்
அறியவே மூவைபீர் திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 17ம் நாள், 03.11.2021 புதன்கிழமை)
அறிவிப்பேன் வசிஸ்டமகரிஷி யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான மாற்றம் தந்தருள
ஞானத்திருவடி நூலாக அருளி
ஞானிகள் பூஜைக்கு வழி வகுத்து
4. வகுத்து அற்புதம் நடத்தி
வள்ளலாய் வாழும் ஞானியே
தகுந்தபடி உலக மக்களை
தனிப் பெருந்தயவு நெறிக்கு
5. நெறிக்கு அழைத்து அருளி
நீதிமான்களை படைத்துவர
ஆறுமுக அரங்கன் ஞானவழி
அனுகிவந்த மக்கள் எல்லாம்
6. மக்களெல்லாம் ஞானிகள் ஆகி
மரணம் வெல்லும் சக்தி கூடி
ஆக்கமுடன் ஞான வாழ்வாக
அகிலமாற்றம் செய்து சிறப்பர்
7. சிறப்பான மகாமந்திரம் அருளி
செப்பிடுவேன் அரங்க மகானும்
மறுப்பில்லா வரம் வழங்கிட
மக்களே தஞ்சம் அடைந்துவிட
8. அடைந்துவிட அரங்கன் திருவடி
அழியாமை தரும் மலரடி ஆகும்
தடையின்றி பிரணவக் குடிலை
தரணியோர் அனுகி ஞானம்பெற

9. ஞானம்பெற தீட்சை ஆகமமாக
ஞான சபையில் தருமமிட உதவி
ஞானபண்டிதன் நாமசெபம் தன்னை
நம்பிக்கை வைத்துசெய்து வர

10. வருகவே வரும் இந்த மக்களுக்கு
வாசிவசம் ஞான சுகம்
தருமபலமோடு தயவு குணம்
தனித்துவம்பட பெருகி உலகோர்

11. உலகோர் அரங்கன் தேர்வாக
உயர்வான ஞானிகள் ஆவர்
உலகமாற்றம் செய்து சிறப்பர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–